ISSN:2582-9599

# சிலம்பு கூறும் பாரம்பரிய இசையும் இசைக்கருவிகளும்

**முனைவர் வெ.நிர்மலா,துறைத் தலைவர், தமிழ்த்துறை,**
**அருள்மிகு சுப்பிரமணியசுவாமி அரசு கலைக்கல்லூரி,**
**திருத்தணி-631209,திருவள்ளூர் மாவட்டம்.**

11

**ஆய்வுச் சுருக்கம் -**

சிலப்பதிகாரம் காலத்தால் பழமையான காப்பியமாகும். சங்ககால மக்களின் வாழ்வியலின் தொடர்ச்சியும், அம்மக்களின் பண்பாட்டு மரபுகளும் மிகுதியாகக் காணப்படுகின்றன. முத்தமிழ்க் காப்பியமாகத் திகழும் சிலப்பதிகாரத்தில் தமிழிசையின் பெருமையும், சிறப்பும் கூறப்பட்டுள்ளன. பண்கள், பாடல்கள், இசைக் கருவிகள், தாளம், சுருதி, சுவரம் முதலியனவற்றைப் பற்றி விரிவான விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. நமது பாரம்பரியத்தின் சிறப்பைப் பற்றிப் பேசும் நாம், நம் முன்னோர்கள் பயன்படுத்திய இசைக் கருவிகளைப் பற்றி முதலில் அறிந்துகொள்வது மிகவும் அவசியமாகும்.

இசைத்தமிழ் என்பது தமிழ்நாட்டில் நம் தொல்குடி சமூகத்தினரால் கண்டுபிடித்துச் சுவைக்கப்பெற்றவை. சிலம்பில் முப்பது காதைகளில் பதினைந்து காதைகள் இசை மற்றும் இசைக்கருவிகள் குறித்த செய்திகளை கொண்டுள்ளது. இதனை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஆய்வு முன்னுரை–**

இசை என்பது மகிழ்ச்சியின் எழுச்சிகளுள் ஒன்று. காப்பிய மக்களின் வாழ்க்கையின் அனைத்து நடவடிக்கைகளும் இசையுடன் கலந்தே நடைபெறுகின்றன என்பதை அறியமுடிகிறது. நமது பண்பாட்டின் தோற்றுவாயிலாக விளங்கும் வேத இலக்கியத்தை ஆராய்ந்தால் பல தெய்வங்களை வழிபடுவதற்கென்று செய்யப்பட்ட வேள்விகளில் இன்னிசை கையாளப்பட்டது தெரிய வருகிறது. சிலப்பதிகாரம் இசை நுணுக்கம் கொண்ட காப்பியம். சிலப்பதிகாரத்தில் அரங்கேற்றுக் காதையில் இசையைப் பற்றிய சிறப்பான செய்திகள் காணப்படுகின்றன.

இசைக்கருவிகள் நரம்புக்கருவி, காற்றுக்கருவி, தோல் கருவி, உலோகக் கருவி என்று பிரிக்கப்பட்டுள்ளன. இந்நால்வகைக் கருவிகளைப் பற்றியக் குறிப்புகளும் இக்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளதை ஆய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**குயிலுவக்கருவி -**

சிலம்பில் நால்வகைக் கருவிகளும் ஒருசேர குயிலுவக்கருவி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. “நாடக மகளுரும் நலந்தகு மாக்களும் கூடிசைக் குயிலுவக் கருவியாளரும்” (26:141) “கண்ணுளாளர் கருவிக் குயிலுவர்” (5:184).

**உத்தமக்கருவி -**

உத்தமக் கருவியானது இசையரங்கு கருவியாகவும், குரலிசைக்குப் பக்க வாத்தியமாகவும் வாசிக்கப்படுவன. மத்தளம், சல்லிகை, இடக்கை, தண்ணுமை என்கிற நான்கினையும் உத்தமக்கருவிகள் என்கின்றது சிலம்பு. “மத்தளம் தண்ணுமை இடக்கை சல்லிகை என வைத்த நான்கும் உத்தமக்கருவி”.

**யாழ் -**

இசைக்கருவிகளின் நால்வகைப் பாகுபாட்டில் முதன்மையானது நரம்பு கருவி, யாழ் மற்றும் வீணை பற்றிய குறிப்புகளைச் சிலப்பதிகாரத்தில் காணமுடிகிறது. யாழின் நான்கு வகைகளும், அவற்றின்

உறுப்புகளும், அமைப்பும், வாசிக்கும் முறைகளும் பற்றி மிகச் சிறப்பானதொரு விளக்கத்தைச் சிலப்பதிகாரத்தின் கானல்வரி காணமுடிகிறது. சோழநாட்டில் காவிரி பூம்பட்டினத்தில் மாதவியின் நடனத்தைக் கண்டு இன்புற்ற கோவலன் அவளுடன் இணையில்லாத இன்பம் நாளும் அனுபவித்து வந்தான். இந்திரனுக்கு 28 நாட்கள் விழா எடுக்கப்பட்டபோது, அந்நகர மாந்தர் மரபுபடி கடலாடுதற்குச் சென்றனர். கடலாடிய பிறகு, யாழின் கலைநுணுக்கம் எல்லாம் வெளிப்படுத்தி காதற்சுவை மிக்கப் பாடல்களை இருவரும் பாடினர்.

மாதவி தன் தோழி வசந்தமாலையிடமிருந்து யாழைத் தொழுது வணங்கினாள். இந்த பகுதியில் யாழ் பற்றிய மேற்கூறிய செய்திகள் அனைத்தையும் இளங்கோவடிகள் கொடுத்துள்ளார். யாழின் மாட்சி, யாழின் உறுப்புகள், இசை எழால் எண்வகை, இசைக் கரணம் எட்டுவகை கொடுக்கப்பட்டுள்ளன. நால்வகை யாழ்களாவன: "பேரியாழ் பின்னு மகரஞ் சகோடமுடன் சீர் பொலிவும் செய்கோடு செப்பினார் தார்பொலிந்து மன்னும் தருமார் வண்கூடற் கோமானே பின்னும் உளவே பிற".

**பேரியாழ் -**

மென்மைத் தன்மையுடன் கரிய நிறத்தினைக் கொண்டு வளைந்தேக்கின் கோட்டினையும், பெரிய ஓசையும் உடையது. இது முருக்கி கட்டிய நரம்பினையும், கைத்தொழிலால் பொலிவு பெற்ற போர்வையினையும், 21 நரம்புகளையும் கொண்டது.

**மகரயாழ் -**

இது முதற்சங்க காலம் தொட்டு சீவக சிந்தாமணி காலம் வரை பழக்கத்தில் இருந்து வந்துள்ளது. இதற்கு 17 அல்லது 19 நரம்புகள் உண்டு. மீனின் தோற்றத்தைக் கொண்டதால் இப்பெயர் பெற்றது.

**சகோடயாழ் -**

கோவலனும் கண்ணகியும் கடற்கரையிலே வாசித்தது. இதற்கு 14 நரம்புகள் உண்டு. "ஈரேழ் தொடுத்த செம்முறைக் கேள்வி" என்று குறிப்பிட்டிருப்பதால் 14 நரம்புகளை உடையது என்பது தெளிவாகிறது. "வலக்கை பதாகை கோட்டொடு சேர்த்தி இடக்கை நால்விரன் மாடகந் தழீஇ" வலக்கையைப் பதாகையாக்கி, அக்கையால் கோடு அசையாதபடி பிடித்து இடக்கை நாலு விரலும் மாடகத்தில் உரத்தழுவி சகோடயாழினை மாதவி வாசித்தாள்.

**செங்கோட் யாழ் -**

சிலப்பதிகாரத்தில் குறிப்பிட்டுள்ள நால்வகை யாழ்களுள் சிறியது. 7 நரம்புகள் உடையது. செந்நிறமானது. இது சீறியாழ் என்றும் அழைக்கப்படும். இளங்கோவடிகள் இதனைச் செங்கோட்டு யாழ் என்றும் வணர்கோட்டு வாழ் என்றும் குறிப்பிடுகின்றார். "வணர்கோட்டு சீறியாழ்" (28:31) கடலாடுகாதை இறுதியில் வசந்தமாலை யாழை மாதவியிடத்தில் தருகின்றாள். அதனை,"திருந்துகோல் நல்யாழ்" என்று இளங்கோவடிகள் போற்றுகின்றார். திருந்துகோல் அதாவது வளையாத கோல் என்றதால் இது செங்கோட்டு யாழைக் குறிப்பிடுகின்றது.

"செந்நிறம் புரிந்த செங்கோட்டி யாழ்" (13:106) கோவலன் புறஞ்சேரி சென்றபோது கொற்றவை தேவியின் போர்க்கோலத்தைப் போற்றிப் பாடிக் கொண்டிருந்த அம்பணவர் என்னும் இசையாளர்களுடன் சேர்ந்து செங்கோட்டுயாழினை இசைத்து மகிழ்ந்தான். பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு, கையூழ், குறும்போக்கு என்று யாழ் மீட்டுவதற்குரிய எட்டு விதிகளை

இளங்கோவடிகள் கொடுத்துள்ளார். கானல்வரியில் யாழின் உறுப்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன. “சித்திர படத்துட்புக்கோட்டின் மலர் புனைந்து மைத்தடங்கண் மணமகளின் கோலம்போல் வனப்பெய்தி பத்தரும் கோடும் ஆணியும் நரம்புமென்று இத்திறத்துக் குற்றம் நீங்கிய யாழ்க்கையிற் தொழுது வாங்கி” (7:1,4) யாழானது புதுப்பட்டுடுத்தி மணமகளின் வனப்புடன் ஒப்பிடப்பட்டுள்ளது.

**வீணை -**

வீணை பற்றிய குறிப்பும் சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றது. “நாரதன் வீணை நயந்தெரி பாடலும் தோரிய மடந்தை நயந்தெரி பாடலும்” (6:18) இந்திர லோகத்தில் ஊர்வசி ஆடுகின்றாள். அவள் காமமயக்கத்தில் இருந்ததினால் ஆடலில் வழுவுண்டாகிறது. அவ்வழு அவளது ஆடலுக்கு இசைக்கட்டிய வீணையையும் போய்ச் சேருகின்றது. இது நாரதரின் வீணையாகும். மாதவியின் பிறப்பினை விளக்கும் இடத்தில் வீணை பற்றி இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார்.

**குழல் -**

காற்றுக்கருவி வகைகளில் குழலும், சூறைச் சின்னமும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆய்ச்சியர் குரவைக்கூத்து ஆடியபோது ஆயர்களின்குழல் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. கொன்றைக்குழல், முல்லைக்குழல், ஆம்பல் குழல் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. குழல் அமைக்கப்படும் விதம், வாசிக்கும் முறை, குழலாசிரியன் அமைதி பற்றிய செய்திகளெல்லாம் சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றன.

**சூறைச்சின்னம் -**

பாலை நிலத்தவர் தாம் வழிப்போக்கரைக் கொள்ளையிடுகையில், அதற்கு அடையாளமாக ஊதிய கொம்பு சூறைச்சின்னம் ஆகும். இது வாய் சிறுத்தது. போகப் போகப் பெருத்தது. “ஆறெறி பறையும் சூறைச் சின்னமும் கோடும் சூழலும் பீடுகெழு மணியும் கணங்கொண்டு துவைப்ப அணங்குமுன் நிறீ இ”(12:40,42).

**கோடு -**

இது ஊதுகொம்பு, முருகனை வழிபடும் வழிபாட்டில் வெறியாடு களத்தின் ஆடுகளத்தில் ஆரவாரத்திற்கு ஏற்ப பாடி கோடுகள் பலவற்றையும் ஊதுவர். “கோடுவாய் வைம்மின்” (1:17).

**பறை -**

தோல்கருவி வகைகளில் வல்வகைப் பறைகளைப் பற்றிய குறிப்புகள் சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றன. பறை ஒருமுகத் தோற்கருவி. ஆதி மனிதன் உடைந்த பானை, குடம் இவற்றின் வாயின் மேல் தோலை இழுத்துப் போர்த்து சுற்றிலும் கட்டிக்கொண்டு முழங்கத் தொடங்கினான். சிலப்பதிகாரத்தில் தொண்டகப்பறை, சிறுபறை, ஆறெறி பறை, நாக்கடிப்பாக வாய்பறை போன்ற பலவகைப் பாறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

**ஆறெறி பறை -**

சிலப்பதிகாரத்தின் வேட்டுவவரியில் வேட்டுவர்களின் ஆடல், பாடல், வழிபாடு விளக்கப்பட்டுள்ளன. சாலினி என்ற பெண் கொற்றவை போல வேடம் புனைந்து ஒரு மானின் மீது அமர்ந்து கொற்றவை தெய்வமேறப்பெற்று பல செய்திகளைக் கூறுகின்றாள். தெய்வமேறிய சாலினிக்கு இசைவழிபாடு வேட்டுவர்கள் செய்கின்றனர். அப்போது ஆறெறி பறையை முழக்கினார்கள். “ஆறெறி பறையும் சூறைச் சின்னமும் கோடும் சூழலும் பீடுகெழு மணியும்”.

**நாக்கடிப்பாக வாய்பறை -**

நாக்கு என்னும் கோலால் வாயாகிய பறையை அடித்தல்,"அறத்துறை மாக்கள் திறத்தில் சாற்றி நாக்கடிப்பாக வாய்ப்பறை அறையினும் யாப்பறை மாக்கள் இயல்பில் கொள்ளார்" (14:28,30).

தொண்டகப்பறை, சிறுபறை -

இது குறிஞ்சி நிலத்துத் தோற்கருவி. ஒருமுகப் பறை. "தெய்வங் கொள்ளுமின் சிறுகுடியீரே தோண்டகந் தொடுமின் சிறுபறை தொடுமின்" தொண்டகப்பறையினையும், சிறுபறையினையும் முழக்கி குறிஞ்சி நிலத்து மாந்தர் முருகனைப் பரவினார்கள் என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார்.

**நாட்பறை -**

நாள் பறை. ஒரு நாளின் நிகழ்ச்சிகளையும் செய்திகளையும் அந்த நாளில் அறிவிக்க முழங்கப்படும் பறை வகை. இதனைக் காலை முழவு என்றும், நாண்முழவு என்றும் குறிப்பிடுவார்கள். "நாண்முழவு ஆவன நாட்பறை" (3:27).

ஏறங்கோட்பறை -

இது முல்லை நிலப்பறை, பேயின் கண்போன்று பறையில் வாய்த்தோலின் நடுவில் கருப்பு மண் பூசப்பட்டிருக்கும். "பறைக்கண் பேய்மகள் பறைபுரை விழிகள்" (3:29:209).

**முரசு -**

இது மிகப்பெரிய ஒருமுகத் தோற்கருவி. போரில் பயன்படுத்தப்பட்டது அரசர்களுக்குரியது. மிக்க மாட்சிமைக்கும், வணக்கத்திற்கும் உரியது. இதற்குச் செய்யும் பூசையில் குருதி பலியூட்டப்பட்டது. "மயிர்க்கண் முரசொடு வான் பலியூட்டி" (5:88).

**ஏற்றுரி முரசு -**

காளைத்தோல் முரசு, பருவமுடைய காளையின் தோலை உரித்து, அதன் மயிர்த் திரளைச் சீவிப் போக்கிடாமல் பக்குவப்படுத்தி சேர்த்து இருக்குமாறு அமைத்து, அத்தோலினால் முரசினைப் போர்த்துக் கட்டி வைப்பார்கள். இது பெரியதாய் வலிமையாய் ஒலிக்கும். "உயிர்ப்பலி உண்ணும் உருமுக்குரல் முழக்கத்து மயிர்க்கண் முரசமொடு மாதிரம் அதிர" (26:125).

**கடிப்பிகு முரசு -**

சிறு குறுந்தடியால் அடிக்கப்படும் முரசம், கடிப்பு ஸ்ரீ நேரான கோல். நுனி கூர்மையாய் இருக்காது. "இடிப்படை வானவள் முடித்தலையுடைத்த தோடி தோட்டென்னவன் கடிப்பிகு முரசே" (17:38) அரங்கேற்றுக் காதையில் பல்வகைப்பட்ட பறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. "பேரிகை, படக, மிடக்கை, யுடுக்கை, சீர்மிகு மத்தளஞ், சல்லிகை கரடிகை, தீமிலை, குடமுழத், தக்கை, கணப்பறை, தமருகந், தண்ணுமை, தாவிறடாரி, அந்தரி, முழவொடு, சந்திர வளையம், மொந்தை, முரசே, கண்விடு தூம்பு, நிசாளந், துடுமை, சிறுபகை, யடக்க, மாசிறகுணிச்சம், விரலேறு பாகம், தொக்கவுபாங்கத், துடி, பெரும்பறை யென மிக்க நூலோர் விரித்துரைத்தனரே" (3:27) இதில் குறிப்பிடப்பட்டுள்ள இசைக்கருவிகள்.

பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிழை, குடமுழா தக்கை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந்திர வளையம், மொந்தை, முரசு, கண்விடுதூம்பு, நிசாளம், துடுக்கை, சிறுபறை, அடக்கம், குணிச்சம், விரலேறுபாகம், உபாங்கம், துடி, பெரும்பறை என பண்டைக்கால இசையரங்கில் கருவியிசையின் வரிசைகள் சிலப்பதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. "குழல்வழி நின்றது யாழே யாழ்வழித் தண்ணுமை நின்றது தகவே தண்ணுமை

பின்வழி நின்றது முழவே முழவொடு கூடிநின்றிசைத்த தாமந்திரிகை" (3:139,142).

பல்லியங்கள் பலகூடி இசைக்கப்படுகையில் குழல் தலைமையில் கடைசியில் ஆமந்திரிகை இசைக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சூழல், யாழ், தண்ணுமை, முழவு, ஆமந்திரிகை என்ற வரிசையில் இசைக்கருவிகள் அமைந்துள்ளன. இதில் நரம்பு, காற்று, தோல்கருவிகள் இடம்பெற்றுள்ளன.

**ஆய்வு முடிவுரை –**

சிலப்பதிகாரத்தில் உள்ள இசை நுணுக்கங்களையும், மாட்சிமைகளையும் விளக்கிக் காட்ட பல நூல்களும் உரைகளும் உதவுகின்றன. பஞ்சமரபு வெண்பாக்களின் மூலமாகவும், அரும்பத உரையாசிரியர், அடியார்க்கு நல்லார் உரைகளின் மூலமாகவும் இசைச்செய்திகள் விளக்கப்பட்டுள்ளன. நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தின்வழி பண்பாட்டு மரபு மாறாமல் இசைக்கலையும், இசைக்கருவிகளும் கடைபிடிக்கப்பட்டுள்ளன.

**தொகுப்புரை -**

சிலம்பில் இசைக்கருவிகள் நரம்புக்கருவி, காற்றுக்கருவி, தோல் கருவி, உலோகக் கருவி என்று பிரிக்கப்பட்டுள்ள குறிப்புகளையும், அதன் பகுப்பாய்வினையும் எடுத்தியம்புகிறது. காப்பிய மக்களின் வாழ்க்கையின் அனைத்து நடவடிக்கைகளும் இசையுடன் கலந்தே நடைபெறுகின்றன என்பதை இதன்மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. நமது பண்பாட்டின் தோற்றுவாயிலாக விளங்கும் வேத இலக்கியத்தில்; பல தெய்வங்களை வழிபடுவதற்கென்று செய்யப்பட்ட வேள்விகளில் இன்னிசை கையாளப்பட்டது இதன்மூலம் தெரிய வருகிறது. சிலப்பதிகாரம் இசை நுணுக்கம் கொண்ட காப்பியம் என்பதுடன் சிலப்பதிகாரத்தில் மரபைப் பின்பற்றி; இசை மற்றும் இசைக்கருவிகள்; பற்றிய சிறப்பான செய்திகள் காணப்படுவதையும் இவ்வாய்வின்மூலம் தெளிவாகிறது.

சிலப்பதிகாரத்தில் தமிழர்கள் பிரித்துப் பார்;த்த ஐந்நில மக்களின் வாழ்க்கை, அவர்தம் இசை முறைகளை முறையாக இளங்கோவடிகள் பதிவு செய்துள்ளார். முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை எனும் ஐந்நில மக்களின் இசையை முறையே ஆய்ச்சியர் குரவை (முல்லை யாழ்), நடுகற்காதை, குன்றக்குரவையிலும் (குறிஞ்சி), வேனிற்காதையிலும் (மருதயாழ்), கானல்வரியிலும் (நெய்தலுக்குரிய விளரி, செவ்வழி) புறஞ்சேரியிறுத்த காலையிலும் (பாலையாழ்) விளக்கியுள்ளார்.

சிலப்பதிகார நூலுள் இசையிலக்கணச் செய்திகளைப் போன்று அடியார்க்கு நல்லாரின் பதிகவுரை மிகப்பெறும் இசை வரலாறுகளை உறுதிப்படுத்துகின்றது. அடியார்க்கு நல்லார் உரையின் துணைகொண்டு இசைக்களஞ்சிய விளக்கங்கள் வழியும் தொடர்ந்து கற்றல் முயற்சியில் ஈடுபடும்போது தமிழரின் பாரம்பரிய இசைக் கருவூலம் சிலப்பதிகாரம் என்பதை அனைவருக்கும் தெளிவுப்படுத்தலாம். நம் தொல்குடி சமூகத்தினர் பயன்படுத்திய பாரம்பரிய இசைக்கருவிகளை அழிவிலிருந்து மீட்டெடுக்க வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமையாக இருக்கிறது என்பதை நாம் மறுப்பதற்கில்லை.

**சான்றெண் விளக்கம் -**

**சிலப்பதிகாரம் மூலமும் திறனாய்வும், பேராசிரியர்.டாக்டர்.ரா.சீனிவாசன், அணியகம், சென்னை-30 முதற்பதிப்பு 1997.**